முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

19.09.2024

1. சுப்பிரமணியர் ஞானம் தந்தருளும்
சூட்சும அவதாரம் எடுத்துமே
ஒப்பில்லா ஓங்காரக்குடில் படைத்து
உலகநலம் வேண்டி அருளும் அரங்கன் யானே

2. யானுமே குரோதி நங்கை திங்கள்
உயர்வான முதல் குருவார அருளாசிதனை
ஞானபூமியாக உலகமாகிட உரைப்பேன்
நம்பிக்கை வைத்து அரங்கனென் ஜீவதடம்

3. ஜீவதடம் வருகின்ற உலக மக்களுக்கு
ஜீவத் தெளிவு ஞான பலமுடன்
அவணியில் உயிர் பாதுகாப்பும்
ஆபத்து கண்டமிலா வாழ்வாய் ஓங்கி

4. ஓங்கியே வாழுகின்ற காலமே
ஓங்கார ஞானம் புரிதல் காணும்
ஓங்காரன் காட்சி அடைதல் வரமும்
ஓங்காரக்குடிலுக்கு வருவதால் கிட்ட நேரும்

5. நேருமையான தருமமான வழிமுறையும்
நெறிபிறழா வாழ்க்கை வாழ்ந்திடவும்
வறுமை பிணி சத்ரு ருணம் அணுகா
வளமும் பலமும் கண்டிடவும் நேரும்

6. நேருமைபட உலக மக்களெல்லாம்
நிலமதனில் சகோதர சமத்துவமானவர்களெனும்
அருமையும் ஒற்றுமை பண்பும் கூடி
ஆகாத சாதி மத இன பேதம் குரோதம் நீங்கி

7. நீங்கியே எல்லாம் இறைபடைப்பே
நிலவுலக இயக்கமே அவன் செயலே என
ஓங்காரமே யாவும் எனும் சரணாகதி
உண்மையும் தெளிவும் பரிபூரணமாகி

8. ஆகியே ஜீவதயவும் பெருகி
அரங்கன் என் தருமநெறியை
மகிழவே ஏற்றுக் கடைப்பிடிக்கும்
மாண்புகள் கூடியே சிறப்பர்

9. சிறப்பான தவசித்தியும் கூட
ஜீவத் தயவால்தான் கிட்டுமென்கிற
மறுக்கவிலா உண்மை ஏற்பாகி
மனமுவந்து உயிர்க்கொலை நீக்கி வாழும்

10. வாழும் மாமனிதர்கள் ஆகி இனிதே
வள்ளல் என் அன்னதான சேவையில்
நாளும் நாளும் பொருளுதவியே
நமனை வெல்லும் தொண்டர்கள் ஆகி

11. ஆகியே அரங்கன் என் ஆசிபட
அனைவரும் பிறவா நிலை அடைவர்
அகிலத்தையே மாற்றும் சக்தி பெறுவர்
அரங்கமகான் யான் அருளிய குருவார அருளாசி முற்றே.

–சுபம்–